இதனைப்பற்றி என்ன? ....

# கர்த்தரின் ஜெபம்

## கர்த்தரின் ஜெபம் பற்றி என்ன?

இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் அனைத்துப் பாவத்திலும் இருந்து எம்மை சுத்திகரித்து, தேவனுக்கு எம்மை ஒப்புரவாக்கி அதனால் தேவனிடம் ஜெபத்தில் வருவதைச் சாத்தியமாக்கியுள்ளது. ஜெபம் எமது கர்த்தரிடமிருந்து வந்த அற்புதமான சிலாக்கியமாகும். ஜெபிக்கும்படி அவர் எமக்குக் கட்டளையிட்டது மாத்திரமல்ல, அவரிடம் ஜெபிக்கும்படிக்கும் எம்மை அவர் அழைக்கிறார். எமது ஜெபங்களை அவர் விரும்புகிறார். ஜெபம் எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதம்! கர்த்தரின் ஜெபம் வேறு அனைத்து ஜெபங்களுக்கும் மேலானது ஏனெனில் எமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனிப்பட்ட ரீதியிலே இந்த ஜெபத்தை சபைக்குத் தந்தார். கர்த்தரின் ஜெபத்தை ஆராய்வதற்கு சிறிது நேரத்தை இங்கே நாம் செலவிடுவோமாக.

## அறிமுகமாக:
## பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே.

*எமது பிதா, இங்கே அன்பிலே வாழும்படியாக மேலே பரலோகத்தில் இருந்து கூறியுள்ளார். அத்துடன் எமது பரஸ்பர சுமைகளையும் எமது ஜெபங்களையும் சக கிறிஸ்தவர்களுடன் பகிரும்படியாகவும் கூறி, எந்த ஒரு சிந்தையற்ற வார்த்தையையும் கூறாதபடிக்கும், மாறாக எமது உள்ளார்ந்த இதயத்திலிருந்து ஜெபிக்கும்படிக்கும் கற்பித்துள்ளார்.* [1]

என்னே ஒரு அற்புதமான ஆசீர்வாதம்! பரலோகத்தினதும் பூலோகத்தினதும் கர்த்தரிடம், காண்பவை காணாதவை யாவையும் படைத்தவரிடம், வல்லமைமிக்க சர்வவல்ல தேவனிடம் நாம் கிட்டிச்சேர்ந்து, அவரைப் "பிதாவே" என்று அழைக்கக்கூடுமாய் உள்ளது. இயல்பிலே, மனிதப்பிறவிகளாகிய நாம் விசுவாசத்துக்கும், நம்பிக்கைக்கும், தேவனில் அன்புக்கும் சார்ந்தவர்கள் அல்ல. அதற்குப்பதிலாக, இயல்பிலே நாம் அனைவரும் கோபாக்கினையின் பிள்ளைகளாக, தேவனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களாக, வீழ்ந்துபட்டுத் தொலைந்தவர்களாக உள்ளோம் என வேத ஆகமங்கள் வெளிப்படுத்தியுள்ளன. எமது கர்த்தராகிய கிறிஸ்துமூலமாக நாம் தேவனை, "பிதாவே" என அழைக்கக்கூடுமாய் இருப்பதற்காக தேவனுக்கு நன்றி. மட்டுமா, அவரிடம் நாம் ஜெபத்திலே வரும்படியாகவும் அவர் விரும்புகிறார். எமது பரலோக பிதாவிடம் நாம் துணிவுடனும் உறுதியுடனும், அவர் தமது நன்மையும் கிருபையுமான சித்தத்துக்கு ஏற்ப, எமது ஜெபத்தைக் கேட்டுப் பதில் தருவார் என்பதை அறிந்தவர்களாக, எமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினூடாக ஜெபிக்கிறோம்.

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே. ... எமது பாவங்களில் இருந்து எம்மை இரட்சிப்பதற்காக உமது ஒரே ஜெனிப்பித்த மைந்தனை அனுப்புமளவுக்கு எம்மை நேசித்தவரே, உமது மைந்தன் எமக்கு ஜெபிக்கும்படி கற்பித்த பிரகாரமாகவே நான் இப்போது உமக்கு முன்பாக ஜெபத்திலே வந்திருக்கிறேன்.

## முதலாவது விண்ணப்பம்:
## உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.

*உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக (பரிசுத்தப்படுவதாக). கர்த்தாவே உமது நாமத்தின் மகிமைக்காக நாம் குற்றமற்ற சுயாதீனர்களாக நடந்துகொள்ளும்படிக்கு, உமது வார்த்தையைத் தூய்மையிலே கைக்கொள்ள எமக்கு உதவி செய்வீராக. எந்தத் தப்பான போதனையும் எம்மை வழிவிலக்காதிருக்கட்டும்; அனைத்துப் பரிதாப ஏமாளி ஆன்மாக்களும் திரும்பட்டும்.*

தனது பெயர் பரிசுத்தப்படுவதற்காகத் தேவனுக்கு நிச்சயமாகவே எமது ஜெபம் தேவையில்லை. அது அதில்தானே பரிசுத்தமானதுடன் அவரது வார்த்தையை நாம் அதன் அனைத்துச் சத்தியத்திலும் தூய்மையிலும் கற்பிக்கும்போதும், அவரது வார்தைக்கு ஏற்ப பரிசுத்தமான வாழ்வை வாழும்போதும் அது பரிசுத்தமானதாகும். எவராவது தேவனுடைய வார்த்தைக்கு முரணாகக் கற்பித்தாலோ அல்லது வாழ்ந்தாலோ, அவன் உண்மையிலேயே தேவனுடைய பரிசுத்த நாமத்தை அசுசிப்படுத்தித் தேவதூஷணம் சொல்கிறான்.

உமது நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. ... கிருபையினால் நீர் என்னை உமது இரட்சிப்பின் ராச்சியத்துக்குள் கொண்டு வந்திருக்கிறீர். மெய்யான விசுவாசத்திலே என்ன என்றும் வைத்து, எனது வார்த்தைகள் மற்றும் செயல்களினூடாக உமது நாமத்தை அர்ச்சிக்கும்படியாக எனக்கு உதவி செய்யும்.

## இரண்டாவது விண்ணப்பம்:
## உமது ராச்சியம் வருவதாக.

*உமது ராச்சியம் வரட்டும், உமது ஆட்சியையும் உமது நித்திய நீதியான ஆளுகையையும் காத்துக்கொள்ளும். பரிசுத்த ஆவியானவர் எமது வழியிலே கொடைகளால், எமது நாளைச் செழிப்பூட்டுகிறார். சாத்தானின் வல்லமையைத் தகர்த்து, அவனது மூர்க்கத்தைத் தோற்கடித்து, உமது சபையை காலம்காலமாகப் பாதுகாத்திடும்.*

மீண்டுமாக, தேவனுடைய ராச்சியம் எமது ஜெபங்களிலே தங்கியதல்ல, மாறாக, அவரது ராச்சியம் எமக்குள் அதன் அனைத்துக் கிருபையிலும் சத்தியத்திலும் வருமென நாம் ஜெமிக்கிறோம். நாம் வரும்படி செய்வதால் தேவனுடைய ராச்சியம் வருவதில்லை, மாறாக, பரிசுத்த ஆவியானவர் எம்மிலே வல்லமையாகக் கிரியை செய்கிறார். அதன்மூலம் நாம் அவரது வார்த்தையை நம்பி, நேரமண்டலத்திலே இங்கேயும், ஈற்றிலே அனைத்து நித்தியத்திலும் தெய்வீக வாழ்வை வாழ்கிறோம்.

உம்முடைய ராச்சியம் வருவதாக. ... கர்த்தாவே, பிறருடன் சுவிசேஷத்தைப் பகிரும்படியாக என்னை வல்லமையாகப் பயன்படுத்தியருளும்.

## மூன்றாவது விண்ணப்பம்:
## உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக

*நாம் நல்ல காலத்திலோ அல்லது கெட்டகாலத்திலோ பொறுமையுடன் உமக்குக் கீழ்ப்படியும்படியாக, உம்முடைய கிருபைமிகு சிதத்ம் உமது சிங்காசனத்தின்முன்பாக செய்யப்படுவதுபோலவே பூமியிலேயும் செய்யப்படுவதாக. உமது சித்தத்துக்கு எதிராக தன்னை அமைத்துக்கொள்ளும் அனைத்து மாம்சத்தையும், இரத்தத்தையும் அனைத்து தீங்கையும் தடுத்தாட்கொள்ளும்.*

தேவன் எம்மிலும் உலகிலும் தனது வழிமுறையைக் கொண்டிருப்பார் என்பது உறுதியும் நிச்சயமுமானதாகும். இங்கே நாம் ஜெபிப்பது அவரது சித்தம் எமக்குள் செய்யப்படும்படியாக. எமது வாழ்விலே – பிசாசையும், உலகத்தையும் மற்றும் எமது பாவமான இயல்பையும் உள்ளிட்டதாக – எமக்கும் தேவனுடைய சித்தத்துக்கும் இடையே எவ்விதத் தடையையும் வைப்பதிலிருந்து அவையனைத்தையும் தவிர்த்திடும்படியாக நாம் தேவனிடம் கேட்கிறோம். அவரது வார்த்தையிலே எமது மரணம் வரைக்கும் எம்மைத் தடம்புரளாமல் வைப்பதற்கு அவர் எமக்கு வல்லமை தரும்படியாக அவரிடம் கேட்கிறோம். இதுதான் தேவனுடைய நல்லதும், கிருபைநிறைந்ததுமான சித்தம் என்பது.

உமது சித்தம் பரலோகத்திலே ஆவதுபோல பூமியிலேயும் ஆகக்கடவது .. நாளாந்தமாக, ஏனெனில், உம்முடைய பரிசுத்த சித்தம் எனது வாழ்விலே செய்யப்படும். அத்துடன் உலகம் என்னை உம்மைவிட்டுத் திரும்பும்படியாகத் தூண்டும்போது, உமக்கு உண்மையாக நான் இருக்கும்படி எனக்கு வல்லமை தாரும்.

# கர்த்தரின் ஜெபம் பற்றி என்ன?

## நான்காவது விண்ணப்பம்:
## எமது அனுதின உணவை இன்று எமக்குத் தாரும்.

*எமது அனுதின உணவை இன்று எமக்குத் தந்து, நாம் அனைவரும் உடுத்தப்படவும் ஊட்டப்படவும் செய்யும். யுத்தம், கலகம், கோபதாபங்கள், நோய்கள், மற்றும் பஞ்சம் ஆகியவற்றில் இருந்து எமது வாழ்வைக் காப்பாற்றும், நாம் நேர்மையான சமாதானத்திலே வழும்படிக்கும், பராமரிக்கும்படிக்கும், எப்படியான பேராசையும் நுழையாதபடிக்கும் நீர் தாரும்.*

இந்த வாழ்விலே எம்மீது அவர் பொழியும் அனைத்து அற்புதமான ஆசீர்வாதங்களையும் இனங்காண்பதற்கு எம்மை இட்டுச்செல்லும்படியாகவும் அத்துடன் இந்த வாழ்விலே எமக்கு அவசியமானதும் நாம் வேண்டுவதுமாகிய யாவற்றையும் உள்ளடக்கியதான ஆசிர்வாதங்களுக்காக அவரைத்துதித்து அவருக்கு நன்றி கூறும்படி எம்மை நடாத்தும்படியாகவும் நாம் தேவனிடம் கேட்கிறோம்.

எமது அனுதின உணவை இன்று எமக்குத் தாரும். ... எனது அனுதின வாழ்வினுள் நீர் பொழியும் நான் இலகுவில் மறந்திடக்கூடுமாய் உள்ள அநித்திய ஆசிர்வாதங்கள் அனைத்துமாக உமக்கு நன்றி.

## ஐந்தாவது விண்ணப்பம்:
## எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னிப்பதுபோல எமது குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.

*எமது குற்றங்களை மன்னியும், அவை எம்மை இனிமேலும் தொல்லைதராதபடிக்கு கிருமை மேவிபொழியட்டும்; தாம் வாழும் முறையால் எமக்குத் தீங்கு இழைப்பவர்களை நாமும் மகிழ்வுடன் மன்னிப்போம். ஒவ்வொரு சமூகத்திலும் அன்புடனும் ஐக்கியத்துடனும் சேவிக்கும்படியாக எமக்கு உதவி செய்யும்.*

இங்கே நாம் எமது பரலோக பிதாவிடம் எமது பாவங்களைப் பாராதபடிக்கு, அல்லது அவற்றின் நிமித்தமாக எமது ஜெபங்களை எமக்கு மறுக்காதபடிக்கு கேட்டுக்கொள்கிறோம். தேவன் எமக்கு வழங்கிவரும் திரளான கொடைகளுக்கு நாம் எவ்விதத்திலும் தகுதியற்றவர்கள் என்பதையும், மாறாக நாம் பாவம் செய்வதால் அவரது தண்டனையைப் பெறுவதற்கே தகுதியானவர்கள் என்பதையும் நாம் இனங்கண்டு இவ்விடத்திலே அறிக்கையிடுகிறோம். தம்மை எமக்காகத் தந்த எமது கர்த்தராகிய கிறிஸ்து மூலமாக, தினந்தோறும் நாம் செய்யும் பாவங்களுக்காக, அவரது இரக்கத்தை அருளும்படியாக நாம் தேவனிடம் கேட்கக்கூடுமாய் உள்ளது. அத்தனை கிருபையாகத் தேவனால் மன்னிக்கப்பட்ட நாம், எமக்கு எதிராகப் பாவம் செய்யும் மக்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை செய்திட விரும்புகிறோம்.

எமது கடனாளிகளுக்கு நாம் மன்னிப்பதுபோல எமது குற்றங்களை எங்களுக்கு மன்னியும். ... பிறரை மன்னிப்பதற்கு எனக்கு உதவி செய்யும், அது கடினமானதாக இருந்தாலுங்கூட, எப்போதுமே எனக்கு எவ்வளவாக நீர் மன்னிப்பவராக இருக்கிறீர் என்பதை ஞாபகத்தில் இருத்தியவனாக.

## ஆறாவது விண்ணப்பம்:
## எம்மைச் சோதனைக்குள் விட்டுவிடாதேயும்.

*எமது சினங்கொண்ட எதிரியும் அவனது அனைத்துத் திரளும் எல்லாவகையிலும் எமது ஆத்துமாக்களை தொல்லைப் படுத்தாதபடிக்கு எம்மை சோதனைக்குள் விட்டு விடாதேயும் கர்த்தாவே. எதிர்த்துநிற்க எமக்கு உதவும், உமது வல்லமையால் ஆயுதம்தரித்து, விசுவாசத்திலே திடமாக நாம் நிற்க எமக்கு உதவிசெய்யும்; உமது பிள்ளைகளுக்கு உமது ஆவியானவர் வெளிச்சத்தை அருள்கிறார்.*

இங்கே நாம் தேவன் சோதனையில் இருந்து எம்மைப் பாதுகாத்து, உலகத்தினூடாகவும் எமது பாவமான மாம்சத்தினூடாகவும் பிசாசானவன் எம்மைத் தாக்குவதில் இருந்து பாதுகாக்கும்படிக்கும் தேவனிடம் கேட்கிறோம். தப்பான நம்பிக்கைக்குள், அல்லது ஏமாற்றத்துக்குள் அல்லது வேறெந்த வெட்கங்கெட்ட பாவங்களுக்குள் நாம் நெறிதவறிப் போகும்படியாக விட்டுவிடாதபடிக்கு நாம் கேட்கிறோம். அனுதினமும் நாம் தாக்கப்படுவதையும் தேவனுடை சித்தத்துக்கு முரணாக வாழவும் சோதிக்கப்படுகிறோம் என்பதை நாம் அறிவோம். எமக்காக கிறிஸ்து இந்த உலகத்தை மேற்கொண்டார் என்பதையும், இந்த வாழ்வின் கடைசி மணித்தியாலத்திலே அவற்றின்மீது இறுதியான வெற்றியை நமக்கு அருளுவார் என்பதையும் பற்றியதான தேவனிடமிருந்தான உறுதியான வாக்குறுதி எமக்கு உண்டு.

சோதனைக்குள் எம்மை விட்டுவிடாதேயும். ...கர்த்தாவே, இந்த வாழ்விலே என்னைத் தாக்கும் சோதனைகளுக்கு எதிர்த்து நிற்கவும் அவற்றை மேற்கொள்ளவும் எனக்கு உதவிசெய்யும்.

## ஏழாவது விண்ணப்பம்.
## தீமையில் இருந்து எம்மை மீட்டருளும்

*தீமையான நாட்களில் இருந்து, ஒவ்வொரு இருண்டதும் சோதிப்பதுமான சிக்கலில் இருந்து, எம்மை மீட்டருளும்; நித்திய மரணத்தில் இருந்து எம்மை மீட்டருளும், எமது மூச்சை விட்டுவிடுகையிலே எம்மை ஆறுதற்படுத்தும். இறுதியிலே எமக்கு ஆசிர்வாதமான ஒரு முடிவைத் தாரும்; எமது ஆன்மாக்களைப் பெற்றுக்கொள்ளும் ஓ உண்மைத்துவமிக்க சிநேகிதனே.*

தேவன் எம்மை இந்த வாழ்வின் அனைத்துத் தீமையில் இருந்தும், எமது சரீரத்துடனும், எமது ஆன்மாவுடனும், தேவன் தந்த அனைத்துக் காரியங்களுடனும், எமது நற்பெயருடனும் அது போன்றவைகளுடனும் தொடர்புபட்ட தீமையில் இருந்து எம்மை மீட்கும்படியாக ஜெபிக்கிறோம். கர்த்தருடன் வீட்டுக்கு எடுத்துச்செல்லப்படும் நேரம் வரும்போது, எம்மீது தனது அன்பான பாதுகாப்பைத் தேவன் விஸ்தரித்து, பரலோகத்திலே அவருடன் என்றென்றுமாய் இருக்கும்படியாகத் துயர்மிக்க இந்தப் பள்ளத்தாக்கில் இருந்து எம்மை வெளியே எடுக்கும்படி நாம் கேட்கிறோம்.

தீமையில் இருந்து எம்மை மீட்டருளும். ...என்னை அலைக்கழிக்கும் வாழ்வின் அனைத்துக் காயங்களினின்றும், தீமைகளிலிருந்தும் என்னைக் காத்துக்கொண்டு, தீமையானவனை எப்போதுமே எதிர்ப்பதற்கு எனக்கு வல்லமை தாரும்.

## முடிவாக:
## ராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உமதே, ஆமென்.

*ஆமென், அதாவது அப்படியே ஆகட்டும். நாம் சந்தேகப்படத்தேவை இல்லாமல், மறாக நாம் நம்பும்போது கேட்கும் அனைத்தையும் பெற்றுக்கொள்வோம் என அறியும்படியாக, எமது விசுவாசத்தை வலுவானதாக்கும். உமது மேலான வாக்குத் தத்தத்திலே நாம் எமது கோரிக்கையை விடுக்கிறோம். எமது விசுவாசம் உமது நாமத்திலே "ஆமென்" என்கிறது.*

கர்த்தருடைய ஜெபத்தின் முடிவிலே, எமது கர்த்தர்தான் வல்லமையானவர், அவரது ராச்சியமும் வல்லமையும் மகிமையும் சகல நித்தியத்துக்குமானது எனும் எமது திடவுறுதியை நாம் புலப்படுத்துகிறோம். இந்த வார்த்தைகளுடன்கூட நாம் கர்த்தரிடம் கூறுகிறோம், "நீர் மகாபெரிய மகிமையுள்ள தேவன்."

"ஆமென்" என்ற வார்த்தையுடன் நாம் கூறுவது என்னவென்றால், "ஆமாம், அப்படியாகவே ஆகும்." எனவே, அவர் எம்மை அழைப்புடன் எமது ஜெபத்தையும் கேட்கிறார் எனும் தேவனுடைய வாக்குத்தத்தத்திலே தங்கிநிற்கும் நிச்சயத்துடன், அவர் எமக்குக் கற்பித்த ஜெபத்தை நாம் முடிவுக்குக் கொண்டுவருகிறோம். நாம் "ஆமென்" என்கிறோம், அதாவது, "ஆம் கர்த்தாவே, நீர் உம்மிடம் ஜெபிக்கும்படியாக எனக்குக் கட்டளை தந்திருக்கிறீர், அத்துன் என்னைச் செவிமடுப்பதாக வாக்களித்தும் இருக்கிறீர்."

ஆமென், ஆமென், நாம் ஜெபித்த இந்தக் காரியங்கள் அனைத்தும் அப்படியே ஆவதாக, இயேசுவின் நிமித்தமாக.

1 மாட்டின் லூதர், மேலே பரலோகத்திலிருந்து எங்கள் பிதாவே Our Father Who from Heaven Above, கீர்த்தனை 431, லூத்தரன் ஆராதனை (புனித லூயி: கொங்கோடியா பதிப்பகம் St. Louis: Concordia Publishing House, 1982)

கலாநிதி A.L. பர்ரி (Barry)
தலைவர்,
லூத்தரன் சபை – மிசூரி திருப்பேரவை